22.10.2025

**EP.NO.. 2/2024 in O.S.No.102/1998**

**ம.சா.1 - சரஸ்வதி த/பெ. சுப்பிரமணி**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 22.10.2025 is accordance with the provision of Act X of 3331

**10 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எங்களது பூமியை ஒட்டி தென்புறமாக ஈஸ்வரன், நாயகம் என்பவர்களது பூமி உள்ளது என்றால் சரிதான். ஈஸ்வரன், நாயகம் என்பவர்கள் பூமிக்கு தென்புறமாக 3, 4 எதிர்மனுதாரர்களான பாலசுப்பிரமணியம், நமோ கதிர்வேல் பூமி உள்ளது என்றால் சரிதான். பாலசுப்பிரமணியம், நமோ கதிர்வேல் பூமிகளுக்கு தென்புறமாக 10 முதல் 12 எதிர்மனுதாரர்களின் பூமி உள்ளது என்றால் சரிதான். எனது பூமியை ஒட்டி 3, 4 மற்றும் 10 முதல் 12 எதிர்மனுதாரர்கள் பூமி இல்லை என்றால் சரிதான், சற்று தள்ளி பூமி உள்ளது.

2. 3 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் பூமியை பிரித்து தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். எங்களது பூமியையும், 2, 6 எதிர்மனுதாரர்கள் வகையறா பூமிகளை பிரித்து காட்ட கிழமேலாக கிணற்று மண் போடப்பட்ட பொளி உள்ளது என்றால் இல்லை, நிலம் மேடு பள்ளமாக தான் உள்ளது. பொளி இல்லை. எங்களது பூமி மேடாகவும், 6ம் எதிர்மனுதாரர் பூமி சற்று பள்ளமாகவும் உள்ளது என்றால் சரிதான். எல்லையில், PAP வாய்க்காலுக்கு மேற்கே பைப் குழாய் 10 அடி உயரத்தில் உள்ளது என்றால் தவறு. 5ம் எதிர்மனுதாரர் பூமியில் தென்னை மரங்கள் உள்ளது என்றால் சரிதான்.

3. 10 முதல் 12 எதிர்மனுதாரர்கள், 3, 4 எதிர்மனுதாரர்கள் பூமிக்கு அருகில் இல்லை என்றும், அதை மறைத்து அவர்களை அலைக்கழிக்க வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றால் அது தவறு. மேடாக உள்ள பகுதியில் நாங்கள் தென்னை மரங்கள் வைத்துள்ளோம் என்றால் சரிதான். எங்களுக்கு தனிப்பட்ட முறையில் கிணறு உள்ளது. அதில் இருந்து வரும் தண்ணீரை கொண்டு சொட்டுநீர் பாசனம் மூலமாக தென்னை மரங்களுக்கு நீர்ப்பாய்ச்சி வருகிறோம் என்றால் சரிதான். 17 தென்னை மரங்களை யார் வெட்டினார்கள் என்று குறிப்பிட்டு மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். நான் குறிப்பிட்டு பெயர்களை

சொல்லவில்லை என்றால் சரியல்ல, அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்பதால் தான் குறிப்பிட்டு பெயர்களை சொல்லவில்லை என்றால் சரியல்ல. எங்களது பூமியில் எத்தனை தென்னை மரங்கள் உள்ளன என்றால் அந்த 17 தென்னை மரங்களையும் சேர்த்து 165 தென்னை மரங்கள் உள்ளது.

4. முதல் நிலை தீர்ப்பாணையில் எல்லைகளை நிர்ணயம் செய்ய வேண்டி பெற்ற உத்தரவை நாளது தேதி வரை நிறைவேற்றம் செய்யவில்லை என்றும், அவ்வாறு நிறைவேற்றம் செய்தால் எங்களது பூமியில் எந்த தென்னை மரமும் வெட்டப்படவில்லை என்ற விவரம் தெரியவரும் என்றால் தவறு. 17 தென்னை மரங்களுக்கு யாருடைய கிணற்றில் இருந்து நீர்ப்பாய்ச்சப்பட்டது என்றால் எங்களுடைய கிணற்றில் இருந்து நீர்ப்பாய்ச்சப்பட்டது. எதிர்மனுதாரர்கள் செலவில் நீதிமன்ற ஆணையரை நியமணம் செய்து அந்த 17 தென்னை மரங்களுக்கு யாருடைய கிணற்றில் இருந்து PVC பைப் மூலமாக நீர்ப்பாய்ச்சப்பட்டது என்பதை கண்டறிய எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் இனி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய அவசியம் இல்லை, ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு புள்ளிவிவரமாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி அந்த அறிக்கையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் ஆமாம்.

5. மேற்படி அறிக்கையில், வெட்டப்பட்ட 17 தென்னை மரங்களின் குறிப்புகள் உள்ளன என்றால் அது எங்களுக்கு சொந்தமானது என்று சொல்லியுள்ளார். நீதிமன்ற ஆணையர் மூலம் சொத்தை பௌதீக அமைப்புகளை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தால் அந்த 17 தென்னை மரங்களுக்கும் எங்களது பூமிக்கும் சம்மந்தம் இல்லை என்று தெரிந்துவிடும் என்பதால் தான் நான் மறுக்கிறேன் என்றால் ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். முதல்நிலை தீர்ப்பாணையை நிறைவேற்ற வேண்டி சொத்தை அளவீடு செய்துள்ளோமா என்றால் இன்னும் அளவீடு செய்யவில்லை. அவ்வாறு அளவீடு செய்வதற்கு முன்பாகவே இந்த மனு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நாங்கள் நீதிமன்ற உத்தரவை சரிவர பின்பற்றவில்லை என்றால் சரியல்ல.

6. 6 முதல் 12 எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டு என்ன இடையூறு செய்தார்கள்

என்று சொல்லவில்லை என்றால் தீவணப்புல்லை அறுக்க வேண்டாம் என்று நாயகம், ஈஸ்வரன், நமோகதிர்வேல், சரஸ்வதி, ஈஸ்வரி, சுந்தராம்பாள், கவிதா, கண்ணம்மாள் ஆகியோர் தடுத்தனர். தென்னங்கன்றை பிடுங்கி கொண்டு சென்றுவிட்டார்கள். தீவனப்புல் 141/2 காலையில் பயிர் செய்யப்பட்டது. தீவணப்புல்லை அறுக்கும்போது பிரச்சனை ஏற்பட்டதாக எனது சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

7. நான் கொடுத்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்காதது சம்மந்தமாக மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எடுத்துள்ளேன். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம்.தாவா பூமிக்கு தென்புறமாக கிழமேல் தடத்தில் நாங்கள் தீவணப்புல் நட்டு இடையூறு செய்வதாக பாலசுப்பிரமணியம் அ.வ.எண்.59/2024 என்ற வழக்கை என் மீதும், என் கணவர் மீதும், என் மகன் மீதும் தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அதன் பின்னிட்டு நாங்கள் யோசனை செய்து காவல் நிலையத்தில் பொய் புகார் கொடுத்தும், மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றால் இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்த பின்னிட்டு பாலசுப்பிரமணியம் அ.வ.எண்.59/2024 என்ற வழக்கை என் மீதும், என் கணவர் மீதும், என் மகன் மீதும் தாக்கல் செய்தார். நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நிறைவேற்று மனு 07.06.2024 தேதியில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

8. 29.04.2024 தேதியில் பாலசுப்பிரமணியம் அ.வ.எண்.59/2024 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் எனக்கு நம்பிக்கை இல்லை. (அசல் வழக்கு எண்.59/2024 வழக்குரையின் சான்றிட்ட நகலில் 29.04.2024 ல் தாக்கல் செய்ப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது). எங்களுக்கு மே மாதம் தான் அசல் வழக்கு எண்.59/2024 ன் தபால் வந்தது. என்னிடம் காட்டப்படுவது என் கணவர் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.89/2021ன் பிராது நகல் என்றால் சரிதான். **மேற்படி சூலூர் உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.89/2021 ன் வழக்குரை சான்றிட்ட நகல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்கு மற்றும் வழக்கு சொத்து வேறானது.

9. எ.சா.ஆ.1 வழக்குரையுடன், உள்ள மாதிரி வரைபடத்தில் எங்களது பூமியின் மேல்கோட்டில் தென்வடலாக தடம் காட்டப்பட்டுள்ளது என்றால் தவறு.

தடம் இல்லை. என்னுடைய ஆவணத்திற்கு எதிராகவே நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் என்ன பரிகாரம் கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நீதிமன்ற உத்தரவை அவமதித்தற்காக எதிர்மனுதாரர்களை கைது செய்து சிவில் சிறையில் அடைக்க தாக்கல் செய்துள்ளேன். எனது மனுவில் எந்த வித உண்மைத்தன்மையும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி மனுவை எதிர்மனுதாரர்களை சிறையில் அடைக்கும் பரிகாரம் கேட்டு மனு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. 10 முதல் 12 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தரப்பினர்கள் அல்ல என்பதால் அசல் வழக்கின் தீர்ப்பு 10 முதல் 12 எதிர்மனுதாரர்களை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

10. 17 தென்னை மரங்களை வெட்டப்பட்டதாக சொல்வது எவ்வளவு உயரம் மற்றும் வயது இருக்கும் என்றால் என்னுடைய மரத்தின் உயரம் இருக்கும். என்ன இயந்திரம் மூலம் யார் வெட்டினார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் நாங்கள் இல்லாத நேரத்தில் ஆள் வைத்து ரம்பம் மூலம் அறுத்து ஈச்சரில் ஏற்றி கொண்டு சென்றுவிட்டனர். யார் அறுத்தார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் எதிர்மனுதாரர்கள் தான் வெட்டினார்கள். மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை**

3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் 10 முதல் 12 எதிர்மனுதாரர்களின் குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur